1972 மார்ச் 27]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கண்ட நடனங்கள் எவ்வகையிலே ஆபாசமாக இருந்தன என்று விவரமாக எழுதி அனுப்பினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, அரசினுடைய பரிசீலனை முடிவடைவதற்குள் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் தனிப் பட்டவர்கள் நடத்தும் சினிமாக் கொட்டகைகளில் குழந்தைகளுக்கு என்று அத்தகைய சினிமாக் காட்சிகளை உருவாக்கித்தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதற்கு அந்தப் பட அரங்கு களின் சொந்தக்காரர்கள் சம்மதம் தர வேண்டும். அதுமாத்திர மல்லாமல் குழந்தைகளுக்கு உரிய படங்களை நாம் தேர்வு செய்து குறிப்பிட்ட சிலவிடங்களில்தான் காட்ட முடியுமே அல்லாமல் தமிழ் நாட்டில் எல்லாத் திரையரங்குகளிலும் காட்டுவது என்பது இன்றைய நிலைமையில் அவ்வளவு வசதியுள்ளதாக இல்லை.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, குழந்தைகளுக்குக் காட்டும் படக் காட்சிகளிலே விஞ்ஞானத்தைப் பொறுத்தும், விவசாயத்தைப் பொறுத்தும் ஒரு பகுதி காட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினரவர் கள் குழந்தைகளுக்குக் காட்டப்படும் படத்தை ஒருமுறை கூச்சமில் லாமல் பார்த்துவிட்டு, அதற்குப் பிறகு, தனக்குக் குழந்தை இல்லையே என்ற அந்தக் கூச்சமில்லாமல் பார்த்துவிட்டு, அதில் மேலும் என்னென்ன சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்று கூறுவார் களேயானால் அவைகளெல்லாம் மேற்கொள்ளப்படும்.

ராஷ்டிரபதியின் விருதுகள்

* 718 வின—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 17—12—1971 அன்று தமிழக கவர்னர், தமிழக போலீஸ் அதிகாரிகளுக்கு ராஷ்டிரபதியின் விருதுகளை வழங்கினரா?

(இ) யார் யாருக்கு விருதுகள் வழங்கப்பட்டன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) கீழ்க்கண்ட அதிகாரிகளும் மற்றவர்களும் விருதுகள் பெற்றார்கள் :—

தகைசால் பணிபுரிந்தமைக்காக காவல் படையினருக்கும், தீயணைக்கும் படையினருக்கும் குடியரசுத் தலைவரின் பதக்கங்கள்

(1) திரு. ஜி. எஸ். தாயுமானவர்.

(2) திரு. எம். ஏ. எஸ். மொஹஜீர்.

(3) திரு. கே. ஆர். ஷெனாய், I.P.S.

(4) திரு. வி. கே. பெல்.

பாராட்டத்தக்க பணிபுரிந்தமைக்காக காவல்படை பதக்கம்.

(1) திரு. சி. ஐ. பி. தனராஜ்.

(2) திரு. பி. எஸ். சந்திரன்.

(3) திரு. வி. ராஜகோபாலன்.

(4) திரு. வி. ராமச்சந்திரன்.

(5) திரு. எம். வாமனபிரபு.

(6) திரு. எம். எஸ். சங்கர நாராயணன்.

(7) திரு. எல். ஜகந்நாதன்.

(8) திரு. எஸ். இராமமூர்த்தி.

(9) திரு. கே. நரசிம்மலு.

(10) திரு. ஏ. பி. சாந்தி கணபதி.

(11) திரு. டி. ராமநாதன்.

(12) திரு. எஸ். முனுசாமி.

(13) திரு. கே. ஸ்ரீ குமார மேனன், I.P.S.

(14) திரு. பி. கே. தாமி.

(15) திரு. ஜி. ராமலிங்கம்.

(16) திரு. என். தேவராசன்.

(17) திரு. பி. குழந்தைவேலு.

(18) திரு. ஏ. வாசுதேவன்.

(19) திரு. சி. பி. ராமமூர்த்தி.

(20) திரு. வி. கே. நாயர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

1972 மார்ச் 27]

(21) திரு. எஸ். சேதுராமசாமி.

(22) திரு. பி. நஞ்சகௌடர்.

(23) திரு. எ. முனுசாமி.

(24) திரு. கே. பி. நாயர்.

வீரச்செயல் புரிந்தவர்களுக்கான காவல் பதக்கம்.

(1) திரு. எம். எம். கணேசன்.

(2) திருமதி கண்ணம்மாள் (காலம் சென்ற கே. பொன்னு சாமியினுடைய மரணத்திற்குப்பின் கொடுக்கப் படுகிறது.)

(3) திரு. டி. பி. பக்தன்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, வீரச்செயல் புரிந்தவர் களுக்கு இப்படிப்பட்ட பதக்கங்கள் கொடுக்கும் பட்டியலைப் படித் தார்கள். சென்னையில் நடக்கும் நவீனத் திருட்டுக்களில் துப்புத் துலக்குபவர்களுக்கு, குறிப்பாக சென்னை மாநகராட்சியில் களவு போனதைக் கண்டுபிடித்த அப்படிப்பட்ட அதிகாரிகளுக்கும் இப்படிப் பட்ட பரிசுகள் வழங்கப்பட வேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்தி யிருக்கிறதா? அல்லது அவர்கள் இந்தப் பரிசுகளைப் பெற்றிருக் கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கூடுமானவரையில் பாராட் டுக்குரிய பலரையும் நாம் பரிந்துரை செய்து மத்திய அரசுக்கு அனுப்புகின்றோம். அவைகளில் சிலவற்றைத்தான் அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள், பலவற்றை அவர்களுடைய விருப்பத்திற்கேற்றவாறு அவர்கள் அந்தப் பட்டியலில் சேர்க்கிறார்கள். நாமும் நம்முடைய தமிழக அரசைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதைப்போன்று இதுபோன்ற வீரச் செயல்கள் மட்டு மல்லாமல், பெரும் கொள்ளைகள் இவைகளிலே திறமையாகப் பணி யாற்றிய போலீஸ் அதிகாரிகளுக்குப் பதக்கங்களும், பாராட்டுக்களும் தந்துகொண்டிருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்தப் பதக்கங்கள் கிடைப் பதிலே தீ அணைப்பு படையினரில் யார் யாருக்குக் கிடைத்தது? குறிப்பாக வைகையாற்றிலே வெள்ளம் வந்தபொழுது பலருடைய உயிரைக் காப்பாற்றிய யாருக்காவது பரிசு வழங்கியிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது 17—12—1971 அன்று வழங்கப்பட்ட பட்டியல். இதிலே வைகையாற்றிலே வீரச்செயல் புரிந்தவர்களின் பட்டியல் இடம் பெறவில்லை என்று கருதுகிறேன்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, காவலர் களில் வீரச்செயல் செய்தவர்களுக்குப் பாராட்டுகளும், விருதுகளும் தருகின்றோம். அது பாராட்டுதற்குரிய ஒன்றுதான். அதில் பல நேரங்களில் அவர்கள் உயிரையே தியாகம் செய்யவேண்டியிருப்பதால் அரசாங்கமே அத்தகையவர்களுக்குக் கட்டாய இன்ஷ்யூரன்ஸ் செய்து அந்தப் பணத்தை அரசாங்கம் போட்டு அவர்களுக்கு உதவி செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நல்ல யோசனை.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, இந்த விருது பெற்றவர் களில் நமது மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர், பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் படித்த பட்டியல் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்ததுதான்.

* 719 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1970-ம் ஆண்டில் தமிழகத்தில் தீரச் செயல்களுக்காக ராஷ்டிர பதியின் விருது வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இரண்டு.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அவர்கள் யார் யார்? எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்கிற விபரம் அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதைக் கூடக் கேட்காமல் போய்விடுமோ என்று பயந்தேன். அவர்களுடைய பெயர்கள் விளம் பரமாவது நல்லது. அதிலே ஒருவருடைய பெயர் திரு. ஆர். சேது ராமன். தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் உள்ள உள்ளூர் உயர்நிலைப் பள்ளி ஒன்றில் படிக்கும் 14 வயது மாணவன் திரு. கோவிந்தராஜ் என்னும் திலீப்குமார் 2—9—1967-ம் நாள் காவிரி ஆற்றில் மூழ்கிவிட்ட நிலைமையில் இருந்தபோது மேற்படி நகரில் அரசினர் கல்லூரியில் அப்போது மூன்றாவது ஆண்டு